Pub

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 15/90(11)

அரசாங்க நிருவாக, மாகாண சபைக
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு - 07.
1990, ஜூன் மாதம் 15 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்கள்,
மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்/அரச உடமையாக்கப்பட்ட
-கம்பனிகள்/அரச உடமையாக்கப்பட்ட வர்த்தக முயற்சிகளின்
- தவிசாளர்கள்/தகுதிவாய்ந்த அதிகாரிகள் யாவருக்கும்.

பொதுச்சேவை, மாகாண பொதுச்சேவை, பொதுக்கூட்டுத் தாபனத்துறை, அரச உடமையாக்கப்பட்ட வர்த்தக முயற்சிகள், அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகள், அரச வங்கிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான ஆட்சேர்ப்பு/ நியமனங்கள் மற்றும் பதவியேற்றங்கள்.

அரசாங்க நிருவாக 1990.03.09ஆம் திகதிய 15/90ஆம் இலக்கச் சுற்றறிக்கையையும் 1990.03.25ஆம் திகதிய 15/90(1)ஆம் இலக்கச் சுற்றறிக்கையையும் மேலுந் தொடர்வதாகும்.

02. பொதுச்சேவை, மாகாண பொதுச்சேவை, பொதுக் கூட்டுத்தாபனத்துறை, அரச உடமையாக்கப்பட்ட வர்த்தக முயற்சிகள், மற்றும் முழுதாக அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகள், மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவற்றில் பதவியேற்றங்கள் பதவியேற்றங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு அமைய இன விகிதாசார அடிப்படையானது பின்பற்றப்படுவதற்கு ~~இணங்கக் கொண்டு~~ நடாத்தப்பட வேண்டுமென அரசாங்கமானது தீர்மானித்துள்ளது.

03. கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் அநுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின் இல. 15/90 கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளலாம். அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், கம்பெனிகள், என்பவற்றுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளல் தொடர்பான சுற்று நிருப அறிவுறுத்தல்களைக் கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு பின்னர் வழங்கும்.

04. ஆட்சேர்ப்பு, பதவியேற்றம் மீதான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள் இல. 15/90 மற்றும் இல. 15/90(1) என்பனவும் சேவை நீடிப்பு, பொதுத்துறையில் ஓய்வு பெற்ற ஊழியர்களை மீளவும் பணிக்கமர்த்தல் என்பன மீதான சுற்றறிக்கை அறிவுறுத்தல்களும் மாகாண சபைகளிலும் பின்பற்றப்பட வேண்டும்.

ஒப்பம். கலாநிதி பீ.எ.தி. குணசிங்க
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாணசபைக
- உள்நாட்டலுவல்கள் அமைச்சு.